**செப்டம்பர் – 01**

# TNPSC துளிகள்


- டெல்லி முதல்வர் ரேகா குப்தா, கல்லூரி மாணவர்களுக்கு ஒரு முக்கியப் போக்குவரத்து இணைப்பை மீண்டும் வழங்கும் வகையில் டெல்லி பல்கலைக்கழக (DU) விளையாட்டு துறை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த புகழ்பெற்ற பல்கலைக்கழக சிறப்பு (U-சிறப்பு வகை) பேருந்து சேவையை மீண்டும் தொடங்கி வைத்தார்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் உர்ஜித் படேலை மூன்று ஆண்டுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநராக நியமிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- செப்டம்பர் 01 ஆம் தேதி தொடங்கப்பட உள்ள மாநிலத் தீயணைப்பு ஆணையத்தின் முதல் தலைவராக தமிழ்நாடு காவல் துறை தலைவர் சங்கர் ஜிவால் நியமிக்கப் பட்டு உள்ளார்.
- யுனெஸ்கோ அமைப்பின் தொட்டுணர முடியாத மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சத் மகாபர்வாவைச் சேர்க்க மத்திய அரசு செயலாற்றி வருகிறது.
  - பீகார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் நேபாளத்தில் தோன்றிய சத் பூஜை ஒரு பெரிய சூரியக் கடவுள் பண்டிகையாகும்.
- இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் ஏமன் நாட்டின் கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் உள்ள அரசாங்கமான ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி போராளிக் குழுவின் பிரதமர் அகமது அல்-ரவாஹி கொல்லப்பட்டார்.
- கவிஞர் கிடுகு வெங்கட இராமமூர்த்தியின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையிலும், தெலுங்கு மொழியின் கலாச்சார மற்றும் மொழியியல் முக்கியத்துவத்தை மேம்படுத்தும் வகையிலும், 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதியன்று தெலுங்கு மொழி தினம் அனுசரிக்கப்பட்டது.
- திமிங்கலச் சுறாக்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காவும், 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் தேதியன்று சர்வதேச திமிங்கலச் சுறா தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 30 ஆம் தேதியன்று, உலக நாடுகள் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை அனுசரிக்கிறது.

# தேசியச் செய்திகள்

## PM SVANidhi திட்டத்தின் மறுசீரமைப்பு

- PM SVANidhi திட்டத்தினை 2030 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கவும் அதனை மறுசீரமைக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இந்தத் திட்டம் ஆனது ஆரம்பத்தில் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை மட்டுமே செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டது.
- இது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் நிதிச் சேவைகள் துறையால் கூட்டாக செயல்படுத்தப்படும்.
- புதிய கட்டமைப்பின் கீழ், முதல் கடன் தவணையானது 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- இரண்டாவது தவணை 20,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

- மூன்றாவது தவணை 50,000 ரூபாயாக உள்ளது.
- திட்டத்தின் அமலாக்க பரவல் சட்டப்பூர்வ நகரங்களுக்கு அப்பால் மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரங்கள் மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.
- பயனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களைப் பல்வேறு நலத்திட்டங்களுடன் இணைக்க மாதாந்திர லோக் கல்யாண் மேளாக்கள் நடத்தப்படும்.
- COVID-19 தொற்றுநோய் காலத்தில், 2020 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதியன்று PM SWANidhi திட்டம் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 68 லட்சத்திற்கும் மேற்பட்ட விற்பனை செய்யும் நபர்களுக்கு 13,797 கோடி ரூபாய் மதிப்புள்ள 96 லட்சத்திற்கும் அதிகமான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்தத் திட்டம் பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்கான பிரதமரின் விருது (2023) மற்றும் எண்ணிம மாற்றத்திற்கான வெள்ளி விருது (2022) ஆகியவற்றைப் பெற்று உள்ளது.




## MILMEDICON-2025

- MILMEDICON-2025 புது டெல்லியில் மருத்துவச் சேவைகள் இயக்குநரகம் (இராணுவம்) ஏற்பாடு செய்த இராணுவ அமைப்புகளில் அதிர்ச்சியினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த சர்வதேச மாநாடாகும்.
- இராணுவ நடவடிக்கைகளில் அதிர்ச்சியினால் ஏற்படும் பாதிப்புகளின் சிகிச்சையை மேம்படுத்துவதையும், சர்வதேச மருத்துவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவதையும் இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- MILMEDICON-2025 ஆனது இராணுவச் செவிலியர் சேவையின் 100 ஆம் ஆண்டு நிறைவையும், இராணுவ மருத்துவப் பராமரிப்பில் பெண்களின் மரபு மற்றும் பங்களிப்புகளைக் கொண்டாடுகிறது.




## NARI 2025




- தேசிய வருடாந்திர அறிக்கை மற்றும் குறியீட்டு (NARI) அறிக்கையானது, 31 நகரங்களில் 12,770 பெண்களை ஆய்வு செய்து, தேசியப் பாதுகாப்பு மதிப்பெண்ணை 65 சதவீதமாக குறிப்பிட்டுள்ளது.
- கோஹிமா, விசாகப்பட்டினம், புவனேஸ்வர், ஐஸ்வால், காங்டாக், இட்டாநகர் மற்றும் மும்பை ஆகியவை பெண்களுக்கு பாதுகாப்பான நகரங்களாக தரவரிசைப் படுத்தப் பட்டன.
- பாட்னா, ஜெய்ப்பூர், ஃபரிதாபாத், டெல்லி, கொல்கத்தா, ஸ்ரீநகர் மற்றும் ராஞ்சி ஆகியவை மிகக் குறைந்த பாதுகாப்பான நகரங்களாக அடையாளம் காணப்பட்டன.
- கணக்கெடுக்கப்பட்ட பெண்களில் 40 சதவீதத்தினர் தங்களது நகரத்தில் 'அவ்வளவு பாதுகாப்பாக இல்லை' அல்லது 'பாதுகாப்பற்றதாக' உணர்கிறார்கள் என்று

குறிப்பிட்டனர்.

- 86 சதவீதப் பெண்கள் பகல் நேரங்களில் கல்வி நிறுவனங்களில் பாதுகாப்பாக உணர்கிறார்கள் என்று தெரிவித்தனர்.
- 91 சதவீத பெண்கள் தங்கள் பணியிடத்தில் பாதுகாப்பாக உணர்ந்தனர், ஆனால் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் POSH (பாலியல் துன்புறுத்தல் தடுப்பு) கொள்கை அமலாக்கம் குறித்து உறுதியாக தெரிந்திருக்கவில்லை.
- 2024 ஆம் ஆண்டில், பொது இடங்களில் துன்புறுத்தலை எதிர்கொள்வதாக 7 சதவீதப் பெண்கள் தெரிவித்தனர் என்ற நிலையில் இது 24 வயதிற்குட்பட்ட பெண்களிடையே 14 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- துன்புறுத்தலை எதிர்கொண்ட மூன்று பெண்களில் ஒருவர் மட்டுமே அது குறித்து புகார் அளித்துள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## உக்ரைனின் முன்னணி டீசல் விநியோக நாடு




- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இறக்குமதியில் 15.5 சதவீதப் பங்குடன் இந்தியா மற்ற விநியோக நாடுகளை முந்தி உக்ரைனின் மிகப்பெரிய டீசல் மூல நாடாக மாறியுள்ளது.
- தினசரி ஏற்றுமதி சராசரியாக 2,700 டன்கள் ஆக உள்ளது என்பதோடு இது இந்த ஆண்டு இந்தியாவின் அதிகபட்ச மாதாந்திர ஏற்றுமதி புள்ளிவிவரங்களில் ஒன்றாகும்.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், உக்ரைனின் டீசல் தேவைகளில் 1.9 சதவீதத்தை மட்டுமே இந்தியா வழங்கியது.

## புனாட்சங்சு-II நீர்மின் திட்டம்


- புனாட்சங்சு நதிப் படுகையில் அமைந்துள்ள 1020 மெகாவாட் திறன் கொண்ட புனாட்சங்சு-II நீர்மின் நிலையப் பணிகளை பூடான் நிறைவு செய்துள்ளது.
- அதன் இறுதி அலகு மின் கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டு, பூடானின் மொத்த மின் திறனை சுமார் 40% அதிகரித்து 3500 மெகாவாட்டாக அதிகரித்தது.

❖ இந்தியாவும் பூடானும் இணைந்து புனாட்சங்சு-II உட்பட ஐந்து பெரிய நீர்மின் நிலையங்களை உருவாக்கியுள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## தொழில்துறைகளின் வருடாந்திர கணக்கெடுப்பு 2023–24




❖ புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஆனது, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலக் கட்டத்தை உள்ளடக்கிய வருடாந்திர தொழில்துறை கணக்கெடுப்பு (ASI) 2023–24 அறிக்கையினை வெளியிட்டது.

❖ நடப்பாண்டு விலைகளில் மொத்த மதிப்புக் கூட்டல் (GVA) 2022–23 ஆம் ஆண்டினை விட 2023–24 ஆம் ஆண்டில் 11.89 சதவீதம் அதிகரித்து, 24,58,33,605 லட்சம் ரூபாயை எட்டியது.

❖ 2023–24 ஆம் ஆண்டில் தொழில்துறை உற்பத்தி 5.80 சதவீதம் உயர்ந்து, மொத்த உற்பத்தி மதிப்பு 1,53,27,16,609 லட்சம் ரூபாயாக இருந்தது.

❖ இந்தத் துறையில் மொத்த வேலைவாய்ப்பு 5.92 சதவீதம் அதிகரித்து, 2023–24 ஆம் ஆண்டில் 1,95,89,131 ஆக உயர்ந்துள்ளது.

❖ 2014–15 மற்றும் 2023–24 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தத் துறை 57 லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகளைச் சேர்த்தது.

❖ ஒட்டு மொத்த மொத்த மதிப்பு கூட்டலில் மூல உலோகங்கள் சுமார் 11.56 சதவீதப் பங்களிப்பை வழங்கின என்பதோடு இது அனைத்துத் தொழில் குழுக்களிலும் மிக


உயர்ந்ததாகும்.

- ❖ மொத்த வேலைவாய்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடு, குஜராத், மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகியவை முன்னணி ஐந்து மாநிலங்கள் ஆக உள்ளன.
- ❖ மொத்த மதிப்பு கூட்டலில் மகாராஷ்டிரா 15.95 சதவீதப் பங்களிப்போடு முன்னணியில் இருந்தது, அதைத் தொடர்ந்து குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகியவை இடம் பெற்றன.
- ❖ தேசிய மொத்த மதிப்பில் குஜராத் 19.53 சதவீதம் என்ற நிலையான மூலதனத்தோடு அதிக பட்ச பங்கைக் கொண்டிருந்தது.
- ❖ 2023–24 ஆம் ஆண்டு ASI கணக்கெடுப்பில் பதிவான மொத்தத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 2,60,061 ஆகும்.
- ❖ 2023–24 ஆம் ஆண்டில் மொத்தத் தொழிலாளர்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பங்கு 0.42 ஆக அதிகரித்தது.
- ❖ 2.20 ஆக இருந்த நிலையான மூலதனம் மற்றும் நிகர மதிப்பு கூட்டப்பட்ட விகிதம் மூலதனச் செயல்திறனைக் குறிக்கிறது.
- ❖ தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ரீதியாக தமிழ்நாடு, குஜராத், மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் முன்னணியில் இருந்தன.
- ❖ நிலையான மூலதனத்தில் குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஒடிசா மற்றும் கர்நாடகா ஆகிய ஐந்து மாநிலங்கள் முன்னணியில் இருந்தன.
- ❖ மொத்த உற்பத்தியில் குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஹரியானா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் முன்னணியில் இருந்தன.
- ❖ மொத்த மதிப்பு கூட்டலின் அடிப்படையில் மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் முன்னணியில் இருந்தன.
- ❖ மொத்த உற்பத்தியில் மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் முன்னணியில் இருந்தன.
- ❖ முதல் பத்து தொழில்துறைகள், மொத்த உற்பத்தி சார்ந்த மொத்த மதிப்புக் கூட்டலில் 71 சதவீத பங்கினை அளித்தன.
- ❖ உற்பத்தி சார்ந்த மொத்த மதிப்பு கூட்டலில் ஐந்து முன்னணி மாநிலங்கள் 54 சதவீதப் பங்கினையும், மொத்த வேலைவாய்ப்பில் 55 சதவீதப் பங்கினையும் கொண்டிருந்தன.

## பருத்தி இறக்குமதிக்கு வரி விலக்கு

- ❖ அனைத்து வகையான பருத்திகளுக்கும் 11 சதவீத இறக்குமதி வரிக்கான விலக்கை இந்திய அரசு 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.
- ❖ இந்த முடிவை மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) அறிவித்துள்ளது.
- ❖ இந்த நடவடிக்கையானது ஒட்டு மொத்த ஜவுளி மதிப்புச் சங்கிலியிலும் உள்ளீட்டுச் செலவுகளை நிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 2024-25 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்தில் பருத்தி ஜவுளி ஏற்றுமதி மொத்த ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதியில் 33 சதவீதமாக இருந்தது.
- ❖ அதே காலக் கட்டத்தில் இந்த ஏற்றுமதிகள் 7.08 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப் பட்டன.

- இந்தியா அதன் பருத்தி உற்பத்தியில் 95 சதவீதத்தை, உள்நாட்டு ஜவுளித் தொழில் துறையில் பயன்படுத்துகிறது.
- ஜவுளி-ஆடை மதிப்புச் சங்கிலியில் 45 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பணி புரிகின்றனர்.



Import woes

An increase in the import of cotton in the last two years has brought to fore the urgent need for measures to improve cotton productivity in India

*Cotton and raw cotton imports (in $ million)*

| Month | 2023 | 2024 |
|---|---|---|
| January | 28.99 | 19.62 |
| February | 34.69 | 31.43 |
| March | 55.01 | 48.8 |
| April | 45.3 | 37.91 |
| May | 58.09 | 43.88 |
| June | 95.1 | 70.22 |
| July | 88.72 | 86.29 |
| August | 74.9 | 104.89 |
| September | 39.91 | 134.2 |
| October | 36.68 | 127.71 |
| November | 30.61 | 170.73 |
| December | 29.47 | 142.89 |

| Month | 2024 | 2025 |
|---|---|---|
| January | 19.62 | 184.64 |


## தேசிய கணக்குகளின் அமைப்பு (SNA) 2025




- தேசிய கணக்குகளின் அமைப்பு 2025 என்பது SNA 2008 அமைப்பினை மாற்றி அமைத்த ஒரு திருத்தப்பட்ட சர்வதேசக் கட்டமைப்பாகும்.
- இது நிலைத்தன்மை, சமத்துவமின்மை மற்றும் ஊதியம் பெறாத வேலையை ஒருங்கிணைப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அப்பாலான கணக்கீட்டினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஐ.நா. புள்ளி விவர ஆணையத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- SNA 2025 ஆனது, வளர்ச்சி அளவீடுகளை நியாயத்தன்மை மற்றும் சூழல் சார்ந்த சம நிலையுடன் சீரமைப்பதன் மூலம் இலக்கு சார்ந்த நலன்புரிதல், பாலின வேறுபாட்டிற்கு ஏற்ற கொள்கைகள் மற்றும் நிலையான பொருளாதாரத் திட்டமிடலை செயல்படுத்துகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## கிலாண்டர்ஸ் நோய்ப் பாதிப்பு ஒழிப்புத் திட்டம்




- கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையானது, கிலாண்டர்ஸ் நோய் குறித்த திருத்தப்பட்ட தேசிய செயல் திட்டத்தை வெளியிட்டது.
- இந்தத் திருத்தப்பட்ட திட்டம் ஆனது விலங்கு சுகாதாரப் பாதுகாப்பு, ஒற்றை நிலை சுகாதாரத் தயார்நிலை மற்றும் கால்நடைகள்/குதிரையினங்கள் சார்ந்த வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதை வலியுறுத்துகிறது.
- இந்தத் திட்டமானது மாநில அரசுகள், கால்நடை பல்கலைக்கழகங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.
- கிலாண்டர்ஸ் என்பது குதிரைகள், கோவேறிக் கழுதைகள் மற்றும் கழுதைகளைப் பாதிக்கின்ற, பெரும்பாலும் அவற்றின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற ஒரு தொற்று நோயாகும்.
- பாதிக்கப்பட்ட மண்டலம் 5 கிலோமீட்டரிலிருந்து 2 கிலோமீட்டராகக் குறைக்கப் பட்டு உள்ளது.
- கண்காணிப்புப் பகுதி, முன்னதாக இருந்த 5 முதல் 25 கிலோமீட்டர் வரம்பிலிருந்து தற்போது 2 முதல் 10 கிலோமீட்டர் வரை வரையறுக்கப்பட்டுள்ளது.
- கிலாண்டர்ஸ் தொடர்பான கட்டுப்பாடுகள் தற்போது பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து 10 கிலோமீட்டர் வரை மட்டுமே பொருந்தும்.
- உள்ளூர் மற்றும் அதிக ஆபத்துள்ள பகுதிகளில் குதிரைகளுக்கான கட்டாய மருத்துவச் சோதனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- நோய்த் தொற்று ஏற்பட்டவர்களை விரைவாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, தனிமைப் படுத்துதல் மற்றும் மனிதாபிமானத்துடன் கையாள்வதற்கான சீர் தர இயக்க நடைமுறைகள் நிறுவப்பட்டுள்ளன.
- கிலாண்டர்ஸ் பர்கோல்டேரியா மல்லேயால் ஏற்படுகின்ற நோயாகும் என்பதோடு இது 2009 ஆம் ஆண்டு விலங்குகளின் தொற்று மற்றும் மோசமான நோய்களைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துதல் சட்டத்தின் கீழ் அறிவிக்கத்தக்கது.

### படிநிலை பகுத்தறிவு மாதிரி (HRM)

- அறிவியலாளர்கள் படிநிலை பகுத்தறிவு மாதிரி (HRM) எனப்படும் புதிய செயற்கை நுண்ணறிவு மாதிரியை உருவாக்கியுள்ளனர்.
- மனித மூளையில் உள்ள தகவல்களின் படிநிலை மற்றும் கால முறை அளவிலான செயலாக்கத்தினால் HRM உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த மாதிரியானது 27 மில்லியன் அளவுருக்கள் மற்றும் 1,000 பயிற்சி மாதிரிகளை மட்டுமே பயன்படுத்துகிறது.
- செயற்கை பொது நுண்ணறிவிற்கான (AGI) ARC-AGI-1 அளவுரு சோதனையில் HRM 40.3 சதவீதத்தைப் பெற்றது.
- இந்த மாதிரியானது, சிந்தனைத் தொடர் (CoT) பகுத்தறிவைத் தவிர்க்கிறது என்பதோடு அதற்கு பதிலாக மேம்பட்ட துல்லியத்திற்காக மீண்டும் மீண்டும் மாற்றியமைக்கப் பட்ட தொடர் பகுத்தறிவைப் பயன்படுத்துகிறது.




## முக்கிய தினங்கள்

### அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம் 2025 - ஆகஸ்ட் 29




- அணுசக்தி சோதனைகளால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூரும் வகையில்

ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளைச் செயல்படுத்தியது.

- அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம் ஆனது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- அணுசக்தி சோதனைகளின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளாவிய அமைதியில் விரிவான அணுசக்தி சோதனை தடை ஒப்பந்தத்தின் (CTBT) பங்கையும் இந்த நாள் வலியுறுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★